2015

# செயலாற்றுகை அறிக்கை

**புத்தசாசன அமைச்சு**

## தொலைநோக்கு

**பௌத்த பண்பாடுகளைச் பின்பற்றும் நற்பண்புகள் நிறைந்த ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான முன்னோடியாதல்**

## பணிக்கூற்று

**பௌத்த சாசன வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்டு பௌத்த தர்மத்தை கற்பிப்பதன் அடிப்படையில் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடன் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிறந்த வாழ்க்கை முறையைக் கொண்ட நற்பண்புகள் நிறைந்த சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்கு உதவி புரிதல்.**

## பொருளடக்கம்

விடயம்

அறிமுகம்

அமைச்சு நிறுவப்பட்டதன் பின்னணி மற்றும்

நோக்கம்

**01 புத்தசாசன அமைச்சு**

1.1 அமைச்சின் பணிகள்

1.2 வழிகாட்டிகள்

1.3 புத்தசாசன அமைச்சின் பிரதான பணிகள் பற்றிய விபரம்

1.4 2015 வருடாந்த நிதி

**2. 2015 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள்**

2.1 பௌத்த நாட்டினை அச்சிட்டு பகிர்ந்தளித்தமை

2.2 வசதி குறைந்த பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளை அபிவிருத்தி செய்தல்

2.3 2600 சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு 2600 பௌத்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்

2.4 நேபாளம் லும்பிணி நகரத்தில் அமைந்துள்ள துட்டகைமுனு யாத்திரிகள் விடுதியை புனரமைத்தல்

2.5 வித்தியாலங்கார சர்வதேச மாநாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல்

2.6 இந்தியாவின் புதுடெல்லியில் அமைந்துள்ள யாத்திரிகர் விடுதி

2.7 அநுராதபுரம் குருந்தம் குளத்தில் அமைந்துள்ள யாத்திரிகர் விடுதி

2.8 மகாவலி மகாயே கொத்மலை

2.9 புனித பூமி அபிவிருத்தி

**3 சிந்தனை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்**

3.1 புண்ணிய கிராமம் நிகழ்ச்சித்திட்டம்

3.2 போதை ஒழிப்பு கருத்திட்டம்

3.3 அந்நிய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

**4 புத்தசாசன நிதியம்**

4.1 அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் தற்போதைய வளர்ச்சி

## அறிமுகம்

**‘நற்பண்புகள் நிறைந்த ஒழுக்க மேம்பாடுடையதோர் சமூகம்’**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பில் இந் நாட்டில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு, புத்தசாசனத்தை பாதுகாத்து போஷிப்பதற்கு தேவையான நிதியை வழங்கி ஏனைய சமயங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கொள்கைக்கேற்ப அகிம்சை வழியிலான நிர்வாகம் ஸ்திரத்தன்மையான நாடு எனும் கொள்கைப் பிரகடனத்தின் இருபத்தைந்தாம் பக்கத்தில் அனைத்து மதங்களையும் சார்ந்த மக்கள் தமது வழிபாட்டுக் கடமைகளை பின்பற்றுவதற்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த இலக்கினை அடையும் பொருட்டு பொருத்தமான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் நாட்டிலுள்ள அனைத்து சமூகத்தினரையும் தொடர்புபடுத்தி நற்பண்புகளை மேம்படுத்தும் வகையான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவது புத்தசாசன அமைச்சின் கடமையாகக் காணப்படுகின்றது.எனவே தான் நாட்டிலுள்ள ஏனைய அரச நிறுவனங்களை விடவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

சமூகத்தில் நற்பண்புகளைக் பேணும் பிரஜைகளைக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை காலம் தாழத்தாது செயற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் எந்நேரமும் எடுத்தியம்புவதற்கான காரணம் என்னவெனில் சிந்தனை ரீதியில் மேம்பட்ட பிரஜைகளைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்புவது இன்றைய யுகத்திற்கு மிகவும் அத்தியாவசியமானதொரு விடயமாக இது காணப்படுகின்றமையே ஆகும். இனங்களுக்கிடையில் ஒற்றுமையையம் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை பரப்பும் பொருட்டு சமூகத்தில் பௌத்த தர்மத்தின் அடிப்படையில் தலைமைத்துவம் வகிக்கும் செயற்பாடுகளில் புத்தசாசன அமைச்சானது ஈடுபட்டு வருகின்றது.

அதற்கமைய புத்தசாசன அமைச்சானது அதன் கீழ் இயங்கும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து எமது இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு பாரியளவிலான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

## அமைச்சு நிறுவப்பட்டதன் பின்னணி மற்றும் நோக்கம்

## “இலங்கை குடியரசானது பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றது”

அரசியல் யாப்பின் 10 ஆவது அத்தியாயம் மற்றும் 14 ஆம் அத்தியாயத்தின் (இ) பந்திக்கமைய அனைத்து சமயங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் புத்தசாசனத்தைப் பாதுகாத்து போஷிப்பது அரசின் கடமையாகும்.

**(இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பு)**

## 01 .புத்தசாசன அமைச்சு

## 1.1 புத்தசாசன அமைச்சின் கடமைகள்

- ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு சமயத்தின் முக்கியத்துவத்தினை மக்களிடையே உணர்த்துவதற்கு தேவையான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல்.
- புத்த சமயத்தை போஷித்து பாதுகாப்பதன் பொருட்டு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- புத்த தர்மம் தொடர்பான நிகழ்வுகளை நடாத்துவதுடன் அவற்றின் பயன்கள் பற்றி விபரமறிதல்.
- புனித பூமிகளை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- தேரவாத புத்த தர்மத்தை சர்வதேச ரீதியில் பிரபல்யப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்தல்.
- பௌத்த மத அலுவல்கள் திணைக்களம், புத்தசாசன நிதியம், சர்வதேச பௌத்த மத்திய நிலையம் போன்றவற்றுடன் தொடர்புடைய பணிகள்.
- பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் புத்த, சாசன நிதியம், சர்வதேச பௌத்த மத்திய நிலையம் போன்றவற்றை மேற்பார்வை செய்தல்.

## 1.2 இலகு வழிமுறைகள்

மேற்கூறப்பட்ட விடயங்களை இலகுவாக நிறைவேற்றுவதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

I. தொழில் ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் ஏற்படும் பிரச்சினைகளை இயலுமான வரை குறைத்துக்கொள்ளும் பொருட்டு மத குருமார்களையும் மக்களையும் சந்தித்தது கலந்துரையாடுதல் மற்றும் சிபாரிசுகளை பெற்றுக்கொள்ளுதல்.

II. நிறுவனத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் உள்ளக நிர்வாகத்தின் பொருட்டு இலகு வழிகளை உபயோகித்தல்.

III. Ppub(அரச ஒத்துழைப்பு ) மற்றும் Ppub (அரச தனியார் ஒத்துழைப்பு) என்பவற்றின் தேவைக்கேற்ப பிரவேசித்தல்.

IV. முகாமைத்துவத்தின் போது தேவையான தகவல்களை நிர்மாணிப்பதன் பொருட்டு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல் தேவையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தகவல் தொடர்பாடல் செயற்றிட்டமொன்றை நிர்மாணித்தல்

V. புதிய முகாமைத்துவ முறையினை பின்பற்றுதல்.

VI. சிறந்ததும் திருப்தியானதுமான மக்கள் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

VII. தமது அறிவையும் இலங்கையின் பாரம்பரிய உரிமைகளையும் பாதுகாப்பின் பொருட்டு தகவல்களை பாதுகாத்தல் மற்றும் நிகழ்கால விடயங்களை பாதுகாப்பதற்கும் ஒளிஒலி மற்றும் அச்சு ஊடகங்களை உபயோகித்தல்.

### 1.3 புத்தசாசன அமைச்சின் பிரதான செயற்பாடுகள்

- பௌத்த சமய வழிபாட்டுத் தலங்களுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்கு புதிய உத்திகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சிறந்த சிந்தனையை விருத்தி செய்யும் நோக்குடன் பௌத்த அறநெறிக்கல்வி முறையை செயற்படுத்துதல்.
- அனைத்து பௌத்த சமய வழிபாட்டுத் தளங்களையும் தகவல் தொழிநுட்பத்துறையில் மேலோங்கச் செய்வதன் மூலம் பொதுச் சேவை மையங்களாக இயங்கச் செய்தல்.
- பௌத்த சமய வழிபாட்டுத் தலங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய வகையிலும் மக்களின் அபிமானத்தைப் பெறும் வகையிலும் செயற்படச் செய்தல்.
- பாரம்பரியத்தைப் பேணி நம் எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கும் வகையில் பௌத்த சமய வழிபாட்டுத் தலங்களில் பௌதீக அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல்.

- பௌத்த தர்மத்தையும் பௌத்த தர்மக் கொள்கைகளையும் சர்வதேச ரீதியாகப் பிரசாரம் செய்தல்.
- ஒழுக்க மேம்பாடுடைய ஒற்றுமையானதொரு சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புதல்.

**அமைச்சின் பிரதான பிரிவுகளும் பணிகளும்**

பௌத்த பாரம்பரிய கலாசாரங்களை பின்பற்றும் நற்பண்புகள் நிறைந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான முன்னோடி உத்திகளைச் செயற்படுத்துதல் என்னும் நோக்கத்தை அடையும் பொருட்டு செயற்படுத்தப்பட வேண்டிய பணிகளை முன்னெடுக்கும் முகமாக பிரதான 08 பிரிவுகளைக் கொண்டு புத்தசாசன அமைச்சானது கட்டமைக்கப்பட்டுள்ளது.

அவை,

1. நிர்வாகப் பிரிவு
2. அபிவிருத்திப் பிரிவு
3. கணக்கியல் பிரிவு
4. புனிதபூமி அபிவிருத்திப் பிரிவு
5. புத்தசாசன நிதியம்
6. அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபை

**நிர்வாகப் பிரிவு**

புத்தசாசன அமைச்சின் தொலை நோக்கினையும், பணிக்கூற்றையும் எட்டும் பொருட்டு அமைச்சின் வசமுள்ள மனித வளம் மற்றும் பௌதீக வளங்களை சிறந்த முகாமைத்துவத்துடன் வழிநடத்தி மேற்பார்வை செய்யும் பணியை நிர்வாகப் பிரிவானது மேற்கொண்டு வருகின்றது. மேலதிக செயலாளரின் (நிர்வாகம் மற்றும் நிதி) இன் கீழ் இயங்கும் இப்பிரிவினால் கீழே கூறப்பட்டுள்ள பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

1. அமைச்சினது அனைத்து நிர்வாகப் பணிகள்
2. மேலதிகாரிகள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் தனிதனிக் கோப்புகளை செயற்படுத்துதல்
3. அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களைப் பரிபாலித்தல்.
4. அமைச்சுக் கட்டிடத்தை பரிபாலித்தல்
5. அமைச்சரின் அவலகம் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகம் என்பவற்றின் நிர்வாகப் பணிகள் மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்திச் செய்தல்.

6. அமைச்சில் இடம்பெறும் விழாக்கள் தொடர்பான பணிகள்.

7. பேளத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வை செய்தல்.

8. அமைச்சின் அனைத்து விதமான அலுவலகத் தொலைபேசிக் கட்டணங்களையும் செலுத்துதல்.

9. அமைச்சுக் கட்டடிடத்தின் வரிப்பணம் மற்றும் மின்கட்டணம் செலுத்துதல்

10. அமைச்சினை சுத்தப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு பிரிவு தொடர்பான பணிகள்

11. அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சுடன் தொடர்புடைய சட்ட மூலங்கள் தொடர்பான பணிகள்.

12. வீசா பிரிவு தொடர்பான பணிகள்

*சமயத் தேவைகளின் பொருட்டு வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் பிக்குமார்கள் மற்றும் யாத்திரிகர்களுக்கு தேவையான வீசா சிபாரிசுக் கடிதங்களை வழங்குதல்.(நுழைவு வீசா, வதிவிட வீசா, வீசா நீடித்தல்)

*இங்கு வாசம் செய்யும் வெளிநாடுகளைச் சேர்ந் பிக்குமார்களின் வீசா நீடிப்பிற்கான கடிதங்களை வழங்குதல்.

*தம்பதிவ யாத்திரை முகவர்களைப் பதவு செய்தல்.

*தம்பதிவ யாத்திரைக்கான வீசா சிபாரசுக் கடிதங்களை வழங்குதல்.

*தம்பதிவ யாத்திரை தொடரபான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

13. அலுவலக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்.

## அபிவிருத்திப் பிரிவு

அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்கு வேண்டி அரசு வழங்கும் நிதியை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அனுகூலமான முறையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்துவதன் ஊடாக நற்பண்புகள் நிறைந்த ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு திட்டங்களை வகுத்தல், மேற்பார்வை செய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் அது தொடர்பான விபரங்களை சேகரித்தல் போன்றவை அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணியாகும். இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு கீழே கூறப்பட்டுள்ள பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

*அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் பலதரப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் திட்டமிட்டு ஒழுங்கு செய்வதுடன் அவற்றை மேற்பார்வை செய்து செயற்படுத்துதல்.

*வருடாந்த செயற்திட்டங்களை தயாரித்தல்.

*அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களங்களின் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களை சேகரித்ததல்.

*அமைச்சின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பணிகளுடன் தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரங்களை தயாரித்து மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை செயற்படுத்துவதுடன் தொடர்புடைய பணிகள்

*அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து உள்நாட்டு / வெளிநாட்டு கருத்திட்டங்கள் சம்பந்தமான தொடர்புகளை ஏற்படுத்துதல் நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

*நூல்களை அச்சிடுதல் மற்றும் வருடாந்த நாளேடுகளை அச்சிடுதல்.

*அமைச்சு மற்றும் அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களங்களை மற்றும் நிறுவனங்களுடன் அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமான தொடர்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

*அமைச்சு வெளி நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் விடயங்களுடனான தொடர்புகள்.

*அமைச்சின் தகவல் பிரிவை செயற்படுத்துதல்.

*அமைச்சின் இணையத்தளத்தை செயற்படுத்துதல்.

*அமைச்சு மேற்கொள்ளும் சமயப் புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

*அமைச்சின் ஊடகச் செயற்பாடுகளுக்கான தொடர்புகளை ஏற்படுத்துதல்.

**புனித பூமி அபிவிருத்திப் பிரிவு**

புராதனமானதும் வரலாற்று ரீதியா முக்கியத்துவம் வாய்ந்ததும் பிரதேச ரீதியாக சமய வழபாட்டுத் தலங்கள் மேற்கொள்ளும் சமூக சேவைகளை அடிப்படையாகக் கொண்டும் தெரிவு செய்யப்படும் விசேட வழிபாட்டுத் தலங்கள் 1946 இன் 15 ஆம் இலக்க நகர மற்றும் கிராம நிர்மாண கட்டளைச் சட்டத்தின் கீழ் புனித பூமியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

அதற்கமைய சமய, சூழல், தொல்பொருல், கலாசார, சமூக, பொருளாதாரம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு வழிபாட்டுத் தலத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிதியானது வழங்கப்படும்.

**புத்தசாசன நிதியம்**

புத்தசாசனத்தைப் பாதுகாத்து போஷிப்பதற்கு தேவையான நிதியை சேகரித்து நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன கட்டளைச்

சட்டத்திற்கமைய இது நிறுவப்பட்டுள்ளது. ஊள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் நிதியை சரியான முதலீடுகளைச் செய்தல் இதன் பணியாகும். இதற்கா பொறுப்பு முகாமைத்துவ சபையிடம் வழங்கப்பட்டுள்ளது.

**புத்தசாசன அமைச்சினை தொடர்பு கொள்வதற்கு,**

**அமைவிடம் - புத்தசாசன அமைச்சு, "தஹம்பாய", இல-135, ஸ்ரீமான் அனகாரிக்க தர்மபால மாவத்தை, கொழும்பு -07.**

**இணையத்தளம் - www.mbra.gov.lk**

**மின்னஞ்சல் -**

**தொலைபேசி - 011 – 2307674**

**தொலைநகல் - 011 -2307406**

## கௌரவ அமைச்சரின் அலுவலகம்

| பெயர்-பதவி | தொலைபேசி இலக்கம் | தொலைநகல் இலக்கம் | உள்ளக தொடர்பாடல் இலக்கம் |
|---|---|---|---|
| கௌரவ விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் (புத்தசாசன அமைச்சர்) | 011-2303285 | 011-2303275 | 601 |
| ரிச்சட் தனிப்புலி (பிரத்தியேக செயலாளர்) | 011-5979999 | 011-597999 | 602 |
| ஆர்.எம்.திலக்கமார ரத்நாயக்க அவர்கள் (ஊடக செயலாளர்) | 011-2300511 | 011-2300511 | 605 |
| அசோக்க பிரனாந்து அவர்கள் (இணைப்புச் செயலாளர்) | 011-2303270 | 011-2303270 | 606 |
| பிரேமலால் எல்விடிகல அவர்கள் (இணைப்புச் செயலாளர்) | 011-2303283 | 011-2303283 | 604 |
| கே.ஏ.ஜே.எஸ். குருப்பு அவர்கள் (மக்கள் தொடர்பாடல் அதிகாரி) | 011-2303275 | 011-2303275 | 608 |

## கௌரவ பிரதி அமைச்சரின் அலுவலகம்

| பெயர்-பதவி | தொலைபேசி இலக்கம் | தொலைநகல் இலக்கம் | உள்ளக தொடர்பாடல் இலக்கம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| கௌரவ எச்.ஆர்.சாரதி துஷ்மந்த மித்ரபால (புத்தசாசன பிரதி அமைச்சர்) | 0112303297<br>036-2266705<br>0773724634 | | |
| தில்ருவன் ராஜபக்ஷ (பிரத்தியேக செயலாளர்) | 077-7888885 | | |
| ஏ.பி. விஜயபதிரன அவர்கள் (இணைப்புச் செயலாளர்) | 072-5883338 | | |
| அசங்க வர்ண ரணதுங்க அவர்கள்<br>(இணைப்புச் செயலாளர்) | 077-1685695 | | |

**செயலாளர் அலுவலகம்**

| **பெயர்-பதவி** | **தொலைபேசி இலக்கம்** | **தொலைநகல் இலக்கம்** | **உள்ளக தொடர்பாடல் இலக்கம** |
|---|---|---|---|
| வசந்த ஏக்கநாயக்க அவர்கள் செயலாளர் | 011-2307430 | 011-2307406 | 400 |
| ஜே.ஏ.ஏ.என் கன்னன்கர அவர்கள் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | 011-2307690 | 011-2307688 | 300 |
| ஆர்.பீ.டபளிவ்.குணவர்தன அவர்கள் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | 011-2307403 | 011-2300513 | 402 |
| டி.எச்.டப்ளிவ்.ஆர்.பீ.ரணவன அவர்கள் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | 0113119876 | | 304 |
| பீ.ஏபிரேமசிங்ஹ அவர்கள் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) | 011-2307693 | 011-2307405 | 406 |
| பணிப்பாளர் (புனி பூமி அபிவிருத்தி) | 011-2303294 | | 207 |
| ஆர்.எம்.டி.டி. ராஜபக்ஷ (பிரதான கணக்காளர்) | 0112307673 | | 301 |

| | | | |
|---|---|---|---|
| ஜீ.என.முனவீர (பிரதான உள்ளக கணக்காய்வாளர்) | 011-2307699 | | 212 |
| கணக்காளர் | 011-2307398 | | 303 |
| ஆர்.ஏ.என்.பிரியதர்ஷனி உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 011-5886666 | | 403 |
| எஸ்.பி.டி.நிக்கபிட்டிய உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | 011-2307689 | | 302 |
| ஜே.எம்.கே.டி. ஜயசேகர உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) | 011-2307409 | | 407 |
| டி.எஜ்.சுனில் சமரசிங்ஹ நிர்வாக உத்தியோகத்தர்(ப.க) | 011-2307402 | | 305 |
| மங்களா வாகிஷ்ட அவர்கள் செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 011-2307402 | | 410 |
| புத்தசாசன நிதியம் | 011-2679969 | | |
| அரச கணக்காய்வு பிரிவு | 011-2307401 | | 205 |
| ரஜரட்டை சுற்றுலா விடுதி | 025-2226556 | | |
| தகவல் தொழிநுட்ப பிரிவு | 011-3071801 | | 506 |
| தேசிய போதை தடுப்பு பிரிவு | 011-5769730 | | |

# அமைச்சின் கட்டமைப்பு




பிரிவுப் பொறுப்ப
உத்தியோகத்தர்கள்

## புத்தசாசன அமைச்சின் 2015.12.31 ஆம் திகதிக்கான அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் வெற்றிடம் பற்றிய விபரம்

| தொ. இல | பதவி | உரிய சேவைப் பிரிவு | தரம் | அனுமதிக் கப்பட்ட எண்ணிக் கை | தற்போதுள் ளவர்களின் எண்ணிக்கை | வெற்றிட ம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | இல.நிர்.சே | விசேட ம் | 01 | 01 | - |
| 02 | மேலதிகச் செயலாளர்(நிர்வாகம் மற்றும் நிதி) | இல.நிர்.சே | விசேட ம் | 01 | 01 | - |
| 03 | மேலதிகச் செயலாளர்(அபிவிருத்தி ) | இல.நிர்.சே | விசேட ம் | 01 | 01 | - |
| 04 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இல.நிர்.சே | I | 04 | 02 | 02 |
| 05 | பணிப்பாளர் (அபிவிருத்தி) | இல.நிர்.சே | I | 01 | - | 01 |
| 06 | பிரதான கணக்காளர் | இ.க.சே | I | 01 | 01 | - |
| 07 | உதவிச் செயலாளர் | இல.நிர்.சே | III | 04 | 02 | 02 |
| 08 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப்பணிப்பாளர் | இல.திட்.சே | II/III | 01 | 01 | - |
| 09 | கணக்காளர் | இ.க.சே | II/II/II/ I | 01 | 01 (பதில்) | 01 |
| 10 | கணக்காளர்(பிரதான உள்ளக கணக்காய்வு) | இ.க.சே | I | 01 | 01 | - |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே | மேற்த ரம் | 01 | 01 (பதில்) | 01 |
| 12 | மொழி பெயர்ப்பாளர் | மொ.பெ.சே | III | 01 | 01 | - |
| 13 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | தற்காலிகம் | | 01 | 01 | - |
| 14 | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | அண்மித்த சேவை | | 01 | - | 01 |
| 15 | தகவல் தொழில்நுட்ப | அண்மித்த | | 03 | 03 | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உதவியாளர் | சேவை | | | | |
| 16 | அபிவிருத்தி உதவியாளர் | அண்மித்த சேவை | | 12 | 10 | 02 |
| 17 | திட்டமிடல் உதவியாளர் | அண்மித்த சேவை | | 01 | - | 01 |
| 18 | அபிவிருத்தி உத்தியோகாத்தர் | ஒன்றிணைந்த சேவை | | 90 | 38 | 52 |
| 19 | தொழில்நுட்ப உதவியாளர் | இல.தொ.சே | | 01 | - | 01 |
| 20 | முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே | I, II, III | 31 | 23 | 08 |
| 21 | வரவேற்பு உத்தியோகத்தர் | திணைக்களமயம் | | - | 01 | - |
| 22 | புகைப்படக் கலைஞர் | தற்காலிகம் | | 01 | - | 01 |
| 23 | வீடியோ படப்பிடிப்பாளர் | தற்காலிகம் | | 01 | - | 01 |
| 24 | சாரதிமார்கள் | ஓ.சா.சே. | | 17 | 16 | 01 |
| 25 | புகைப்பட கலைஞர் உதவியாளர் | தற்காலிகம் | | 01 | - | 01 |
| 26 | அலுவலக உதவியாளர் சேவை | சு.பு.சே | | 16 | 15 | 02 |
| **குருந்தம்குளம் சுற்றுலா விடுதி** | | | | | | |
| 27 | பொறுப்பாளர் | அ.மு.ஊ.சே | I | 01 | - | 01 |
| 28 | சமையல்காரர் | திணைக்களம் | | 01 | 01 | - |
| 29 | தொழிலாளர் | திணைக்களம் | | 01 | 01 | - |
| 30 | சுத்திகரிப்பாளர் | திணைக்களம் | | 01 | 01 | - |
| மொத்தம் | | | | | | |

**1.4 2015 இன் வருடாந்த நிதி**

2015 இன் அரசின் வரவுசெலவுத்திட்டத்தின் மூலமாக புத்தசாசன அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ரூ.634.95 மில்லியன் ஆகும். இதில் மீண்டுவரும் செலவினம் ரூ.179.51 மில்லியனோடு மேலதிக நிதி ரூ.652.77 ஆகும். 2015.12.31 ஆம் திகதிக்கு அமைச்சிற்கென ஒதுக்கப்பட்ட மீண்டுவரும் நிதியில் ரூ.159.26 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட மூலதன நிதியில் ரூ.640.48 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 2. 2015 இல் நடைமுறைப்படுத்தபபட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

### 2.1 பௌத்த நாளேடு அச்சிடுதல் மற்றும் பகிர்ந்தளித்தல்

விகாரையில் வாசம் செய்யும் பிக்குமார்களின் உபயோகத்தின் பொருட்டு இந்த நாளேடுகளானது அச்சிட்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. தற்போது இலங்கையில் உள்ள மூன்று நிக்காயகளினது தகவல்களுடன் அவற்றுடன் இணைந்த ஏனைய நிக்காய பிரிவுகளின் தகவல்களைப் போன்றே அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபையின் செயற்குழுச் சபையின் தகவல்கள் போன்ற பிக்குமார்களுக்கு தேவையான தகவல்களை உள்ளடக்கி இந்த நாளேடானது அச்சிடப்படுகின்றது.

விகாரைகளுக்கான நாளேட்டுடன் குறிப்பேடு ஒன்றும் பிக்குமார்களுக்கு உபயோகிக்க கூடிய வகையில் விசேடமாக ஒழுங்கு செய்யபபட்டு அச்சிடப்படுகின்றது. இந்த இரண்டுக்கும் பதிலாக விகாரையின் வணக்கத்திற்குரிய பிக்குமார்களின் போற்றுதற்குரிய சாசனச் சேவையை திறம்பட மேற்கொள்வதற்கு ஏதுவான வகையில் விகாரைச் செயற் குறிப்பேடு ஒன்றினை 2016 இல் இருந்து தயாரித்து பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **தொ. இல** | **நாட்குறிப்பின் வகை** | **நாட்குறிப்புக்களின் எண்ணிக்கை** | **செலவு(ரூ.மில்)** |
|---|---|---|---|
| 01 | விகாரை நாளேடு | 26500 | 5.6 |
| 02 | குறிப்பேடு | 13500 | - |
| | மொத்தம் | | |

## 2.2 வசதி குறைந்த பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளை அபிவிருத்தி செய்தல்

வசதி குறைந்த பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளை அபிவிருத்தி செய்து சமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் புத்தசாசன அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் இந்த அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தின் மூலமாக பௌதீக அபிவிருத்தியின் பயனைப் சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்கும், சிந்தனை ரீதியாக மேம்பட்ட சமூகமொன்றை கட்டியெழுப்புவதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலாளர்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வசதி குறைந்த பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கென 2015 இல் ரூ.50.0 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டதுடன் 2015.12.31 திகதிக்கு விகாரைகளின் அபிவிருத்திப் பணிகளின் பொருட்டு ரூபா 50.0 மில்லியன் மொத்த நிதியும் செலவு செய்யப்பட்டது.

| தொ. இல | மாவட்டம் | விகாரைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி |
|---|---|---|---|
| 01 | காலி | 38 | 5,150.000.00 |
| 02 | மாத்தறை | 22 | 3,200,000.00 |
| 03 | அம்பாந்தோட்டை | 40 | 8,200,000.00 |
| 04 | இரத்தினபுரி | 09 | 1,450,000.00 |
| 05 | பொலன்னறுவை | 63 | 8,750,000.00 |
| 06 | குருநாகல் | 15 | 3ஈ400.000.00 |
| 07 | கம்பஹா | 13 | 3,050,000.00 |
| 08 | அநுராதபுரம் | 07 | 3,150,000.00 |
| 09 | களுத்துறை | 07 | 1,700,000.00 |
| 10 | நுவரெலியா | 02 | 450,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 11 | அம்பாறை | 02 | 350,000.00 |
| 12 | கண்டி | 07 | 1,400,000.00 |
| 13 | மொனராகலை | 10 | 1,810,000.00 |
| 14 | கேகாலை | 06 | 1,250,000.00 |
| 15 | பதுளை | 94 | 800,000.00 |
| 16 | புத்தளம் | 01 | 100,000.00 |
| 17 | திருகோணமலை | 01 | 250,000.00 |
| 18 | மாத்தளை | 03 | 2,300,000.00 |
| 19 | கொழும்பு | 03 | 3,250,000.00 |
| | மொத்தம் | 265 | 50,160,220.00 |



## 2.3 2600 ஆவது சம்யுத்திவ ஜயந்தியை முன்னிட்டு 2600 பௌத்த அறநெறிப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சிதிட்டம்

'அனைத்து சமயங்களையும் சார்ந்த மக்களின் சமய வழிபாடுகளுக்குள்ள சுதந்திரத்தை உறுதி செய்கிறேன்' என்னும் மைத்ரீ ஆட்சியின் கொள்கையைப் பிரதானமாகக் கொண்டு இரண்டாயிரத்து அறுநூறாவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படுகின்றன. அதற்கமைய 2015 இல் இதற்கென ரூபா 90.00 மில்லியன் நிதியானது ஒதுக்கப்பட்டதுடன் இந்த ரூபா 90.00 மில்லியன் நிதியைக் கொண்டு 2015.12.31 ஆம் திகதிக்கு 17 மாவட்டங்களைச் சேர்ந்த 853 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக.

| தொடர் இல | மாவட்டம் | விகாரைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி(ரூபா) |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 29 | 3,700,000 |
| 02 | களுத்துறை | 44 | 5,700,000 |
| 03 | கண்டி | 25 | 2,700,000 |
| 04 | கம்பஹா | 310 | 29,200,000 |
| 05 | இரத்தினபுரி | 1 | 150,000 |
| 06 | காலி | 3 | 450,000 |
| 07 | பொலன்னறுவை | 92 | 11,950,000 |
| 08 | அநுராதபுரம் | 17 | 1,950,000 |
| 09 | குருநாகல் | 141 | 13,150,000 |
| 10 | புத்தளம் | 41 | 2,050,000 |

| | | | |
|---|---|---|---|
| 11 | கேகாலை | 18 | 1,900,000 |
| 12 | மட்டக்களப்பு | 2 | 300,000 |
| 13 | அம்பாறை | 4 | 400,000 |
| 14 | பதுளை | 53 | 7,250,000 |
| 15 | மொனராகலை | 3 | 350,000 |
| 16 | நுவரெலியா | 66 | 7,000,000 |
| 17 | மாத்தளை | 4 | 500,000 |
| மொத்தம் | | **853** | **88,700,000** |

**2015.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| செலவினத் தலைப்பு | 101-01-06-2502-7 |
|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பம் | 2012 |
| அமைச்சரவைத் தீர்மானம் | 2011.04.27 |
| நோக்கங்கள் | 2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகள் 2600 அபிவிருத்தி செய்தல் |
| கால எல்லை | 2012 ஆம் வருடம் தொடக்கம் 2015 வரை |

**ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் செலவு பற்றிய சாராம்சம் 2012-2015 வரை**

| வருடம் | கிடைக்கப்பெற்ற நிதி (ரூ.மி) | செலவு (ரூ.மி) |
|---|---|---|
| **2012** | **100.00** | **94.66** |
| **2013** | **70.00** | **70.05** |
| **2014** | **90.00** | **86.35** |
| **2015** | **90.00** | **90.00** |
| **மொத்தம்** | **350.00** | **341.06** |

## 2.4 நேபாளம் லும்பிணி நகரத்தில் அமைந்துள்ள துட்டகைமுனு யாத்திரிகர் விடுதியை புனரமைத்தல்



நேபாளம் லும்பிணி நகரில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணியின் போது இலங்கையின் சார்பாக பௌத்த யாத்திரிகர் விடுதி ஒன்றை நிர்மாணிக்க வேண்டி ஏற்பட்டமையால் 1989 இல் நேபாளம் லும்பிணி அபிவிருத்தி நிதியத்தினால் இதன் பொருட்டு இலங்கை அரசாங்கத்திற்கென காணிப்பகுதி ஒன்றை ஒதுக்கப்பட்டது. அப்போதைய இலங்கை அரசாங்கமானது இக்காணியில் யாத்திரிகர் விடுதி ஒன்றை நிர்மாணித்து அதனை ஸ்ரீலங்கா துட்டகைமுனு யாத்திரிகர் விடுதி எனப் பெயரிட்டு 1991 இல் மக்கள் பாவனைக்கென வழங்கப்பட்டது.
1992 இல் இருந்து 2002 வரை நேபாளத்தின் சிந்தூர் என்னும் நிறுவனத்தினால் இதன் பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் யாத்திரிகர் விடுதியின் பரிபாலனத்தை 2002 இல் இருந்து இலங்கை அரசாங்கமானது குறித்த நிறுவனத்திடமிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டது. பின்னர் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக இதனை பொதுமக்களின் பாவனைக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டதுடன் 2012 காலப்பகுதியில் இதனை உபயோகிக்க முடியாத வகையில் அசுத்தமான நிலையில் காணப்பட்டது. பின்னர் 2012 இல் மீண்டும் இதன் புனரமைப்புப் பணியின் ஆரம்பிக்கப்பட்டன.



இலங்கை யாத்திரிகர் விடுதி புனரமைப்பின் பின்னர் தோற்றம் - லும்பிணி நேபாளம்

2014 செப்டெம்பர் மாதம் அளவில் யாத்திரிகர் விடுதியின் புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.158.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன் 2015.12.31 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் புத்தசாசன அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வரும் விடுதியின் வருமானத்தைக் கொண்டு அதன் நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 2.5 வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபம்



உள்நாட்டு வெளிநாட்டு பிக்குமார்கள் மற்றும் பொதுமக்கள் பௌத்த தர்மம் தொடர்பாக தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன் பொருட்டு சர்வதேச தரத்திலான மாநாட்டு மண்டபமொன்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக கேட்போர்கூடம், உணவு விடுதி, கண்காட்சிக்கூடம் மற்றும் வரவேற்பு மண்டபம் என்பவற்றை உள்ளடக்கி நவீன தொழிநுட்பத்துடன் கூடிய மாநாட்டு மண்படமாக வித்தியாலங்கார பிரிவென் காணியில் இக்கட்டிடமானது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

2014 இல் இக்கட்டிடத்தின் V ஆம் கட்ட நிர்மாணிப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2015.12.31 இற்கு மாநாட்டு மண்டபத்தில் நிர்மாணப் பணிகளுக்கு வேண்டி ரூ. 95 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

| செலவினத் தலைப்பு | 101-01-06-2502-10 |
|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பம் | 2005 |
| அமைச்சரவைத் தீர்மானம் | 2005.10.06 - 2006.06.15<br>2007.09.06 - 2008.08.07<br>2012.07.23 - 2013.01.18 |
| நோக்கங்கள் | பௌத்த சமயக் கற்றலில் முன்னோடியானவர்களுக்கு உதவும் வகையிலும், பௌத்த சமய எழுச்சிக்கான கருத்தரங்குகளை நடாத்துவதற்கும். |
| கருத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு | ரூ.மி.1350.00 |

**ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் செலவு பற்றிய சாராம்சம் 2012-2015 வரை**

| வருடம் | கிடைக்கப்பெற்ற நிதி (ரூ.மி) | செலவு (ரூ.மி) |
|---|---|---|
| 2005-2012 | 507.30 | 431.70 |
| 2013 | 90.00 | 50.00 |
| 2014 | 90.00 | 69.00 |
| 2015 | 95.00 | 95.00 |
| மொத்தம் | 782.30 | 645.70 |

**நடைமுறைபடுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்**

1ம் கட்டம் - அத்திவாரமிடுதல் - ரூ.133.6 மில்லியன் (Building)

2ம் கட்டம் - அத்திவாரம் / மேல் மட்டம் - 54.9 மில்லியன்(Basement &Slab)

3ம் கட்டம் - கூரை மட்டம் வரை பூர்த்தி செய்தல் ரூ.138.9 மில்லியன்

4ம் கட்டம் - விழா மண்டப கட்டம் - ரூ.110 மில்லிலயன்

5ம் கட்டம் - 2015 இல் கிடைக்கப் பெற்ற நிதி ரூ.95.00 நிதியானது முன்னைய கொடுப்பனவுகளுக்கென செலுத்தப்பட்டது.

## 2.6 புதுடெல்லி ஸ்ரீலங்கா யாத்திரிகர் விடுதி

**ஆரம்பம்**

முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் ஆட்சிக் காலத்தில் (1958) இலங்கை பௌத்த யாத்திரிகர்களின் நன்மை கருதி பிரதான புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வருடத்திற்கு ஒரு ரூபாய் குத்தகை திட்டத்தின்கீழ் காணி ஒன்று ஒதுக்கப்பட்டது. அக்காணியில் 1960 இல் இலங்கை அரசினால் யாத்திரிகர் விடுதியின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**நிர்வாகம்**

1990 இல் இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய மங்கள முனசிங்ஹ அவர்களினால் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரிகளின் பங்களிப்புடன் மேற்கொண்ட திருத்தங்களின் காரணமாக யாத்திரிகர் விடுதியின் வருமானத்தில் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டது. அதற்கமைய புதிய கட்டிடங்களை நிர்மாணித்து யாத்திரிகர் விடுதியின் வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கமைய அப்போதைய ஜனாதிபதினால் இக்கருத்திட்டமானது அனுமதிக்கப்பட்டு யாத்திரிகர் விடுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் விடுதியின் முகாமைத்துவப் பணிகள் மகாபோதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் அவர்கள் முகாமைத்துவத்தில் அவ்வப்போது மாற்றங்களை மேற்கொண்டு வந்தனர். 2011 இல் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் யாத்திரிகர் விடுதியின் நிர்மாணப் பணிகள் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் இதன் நிர்வாகப் பொறுப்புக்களை ஹோட்டல் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பட்டது.

**மேற்பார்வை**

இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தினால் புதுடிடல்லி(இரண்டாம் செயலாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது). யாத்திரிகர் விடுதியின் வரவு செலவுகளை விடுதியின் முகாமையாளரினால் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தினால் கணக்குகள் பரிசீலனை செய்யப்படுகின்றது.

## 2.7 அனுராதபுரம் குருந்தம்குளம் ரஜரட்டை சுற்றுலா விடுதி

